2009 ஜூலை 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 98, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. கண்ணன், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

98—

கட்டடம்

***20624—திரு. பெ. கண்ணன்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், கூலியூர் அங்கன்வாடி மையத்திற்குக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையளிக்க விரும்புகிறேன்.

சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, ஓமலூர் வட்டாரம், கூலியூர் கிராமத்தில் செயல்பட்டுவரும் குழந்தைகள் மையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.3 இலட்சம் நிதியொதுக்கீடு பெறப்பட்டு, குழந்தைகள் மையம் இயங்குவதற்கான அனைத்து அடிப்படை வசதிகளுடன் புதிய கட்டடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. எனவே, விரைவில் இந்த மையம் புதிய சொந்தக் கட்டடத்தில் செயல்பட உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் அந்த திருத்திய விடையைக் கொண்டு வந்து கொடுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. கண்ணன்.

திரு பெ. கண்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாரமங்கலம் தொகுதி, ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், கூலியூர் அங்கன்வாடி மையத்திற்கு கடந்த காலத்தில் கட்டடம் கேட்டு, அது சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியில் இருந்து கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது. இப்போது தமிழ்நாடு முழுவதும் இருக்கிற மொத்தம் அங்கன்வாடி மையங்கள் எத்தனை? அதிலே சொந்தக்

கட்டடங்களிலே இயங்குகிற மையங்கள் எத்தனை? கட்டடம் இல்லாமல் இயங்குகிற மையங்கள் எத்தனை? அவற்றுக்குச் சிறப்பு நிதி ஒதுக்கி தமிழ்நாட்டில் இருக்கிற எல்லா அங்கன்வாடி மையங்களுக்கும் புதிய கட்டடங்களைக் கட்டித் தர அரசு முன்வருமா என்பதையும் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 50,433 அங்கன்வாடி மையங்கள் செயல்பட்டுவருகின்றன. அதில் சொந்தக் கட்டடத்தில் 30,933 மையங்கள் செயல்பட்டு வருகின்றன. அதுபோக வாடகைக் கட்டடத்தில் 9,299 கட்டடங்கள் செயல்பட்டு வருகின்றன. ஆகவே, கடந்த ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி நிதியிலிருந்து ரூ.10 இலட்சத்தில், குழந்தைகள் நல மையக் கட்டடங்கள் கட்டும் பணிக்கு ஒதுக்கப்பட வேண்டும் என்று நம்முடைய மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள் விதித்த வழிகாட்டி விதிமுறைப்படி இப்போது அனைத்து மையங்களுக்கும் படிப்படியாக கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 99, மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

99—

மீன் பதனிடும் தொழிற்கூடம்

***46605—திரு. கி. ஆறுமுகம்:**

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாமல்லபுரத்தில் மீன் பதனிடும் தொழிற்கூடம் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,